1982 மார்ச் 20]

இருந்து குடியாத்தத்திற்கும் இந்தச் சலுகை இல்லையே. ஆகவே அந்தப் போக்குவரத்துக் கழகமும் இந்தச் சலுகையை அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலேயும் நாம் அந்த சலுகையைக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது சம்பந்தமான குறிப்பு இங்கே இருக்கிறது. கொடுத்திருக்கிறோம்.

1972 ஆம் ஆண்டுக்கு முன்பு கண்டக்டர் லைசன்ஸ் பெற்றவைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.

* வினா எண் *581*—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972 ஆம் ஆண்டுக்கு முன்பு கண்டக்டர் லைசன்ஸ் பெற்ற கண்டக்டர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களில் கல்வித் தகுதி, வயது வரம்பு பாராமலும் வேலை கொடுக்க அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுலாகும் ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-க்கு முன்னால் அரசால் வழங்கப்பட்ட கண்டக்டர் லைசன்ஸ் வைத்திருப்பவர்கள், அரசு போட்டிருக்கும் உத்தரவின் காரணமாக கல்வித் தகுதியின் அடிப்படையில் லைசன்சு வழங்கப்படும் என்று வழங்கியதற்குப்பின்னால் 10 ஆண்டுகள், 5 ஆண்டுகள் தனியார் நிறுவனங்களிலே வேலை பார்த்து கண்டக்டர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு அந்தத் தகுதியைக் கொடுத்து, அது நாம் கொடுத்தலைசன்சு என்ற காரணத்தினால் அதை மறுபரிசிலனை செய்து நமது போக்குவரத்துக் கழகங்களில் எடுத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நாம் இப்போது போட்டிருக்கின்ற உத்தரவின்படி எஸ்.எஸ்.எல்.சி. தகுதியைப் பெற்றவர்கள் மட்டும்தான் அந்த நடத்துனர் உரிமத்தைப் பெற முடியும். அதைத் தொடர்ந்து அந்தத் தகுதியை உடைய நடத்துனர்கள் மட்டும்தான் போக்குவரத்துக் கழகங்களிலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற உத்தரவை நாம் போட்டிருக்கிறோம். அதற்கு முன்னால் வரை நாம் அந்தத் தகுதியைப் பார்க்கவில்லை. எஸ்.எஸ்.எல்.சி.க்கு குறைந்தவர்களை நாம் எடுத்துக் கொண்டிருந்தோம். அப்போதே அவர்கள் சேர்ந்து இருக்க முடியும். இப்போதுதான் அதற்கு வருகிறார்கள் என்று சொன்னால், இல்லை என்ற பின்னால் தான் ஞாபகம் வருகிறதா என்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இருந்தாலும் அது நல்ல உணர்வோடு பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம் மாதிரி கண்டக்டர்களாக லைசன்சு பெற்று இருப்பவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்களுடைய பெயரைப் பதிவு செய்து இருக்கிறார்கள். அந்த வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து இருக்கின்ற முன்னுரிமை அடிப்படையிலே கண்டக்டர்களை நம்முடைய போக்குவரத்துக் கழகங்களிலே எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எல்லோரும் தான் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்கிறார்கள். குறிப்பாக இப்போது பி.காம். படித்தவர்கள் பதிவு செய்கிறார்கள். இதிலே நாம் கேட்கிற போது பி.காம். (பர்ஸ்ட் கிளாஸ்) வேண்டும் என்று கேட்கிறோம். அது அந்தத் தகுதி. எனவே பதிவு செய்யப்பட்டதற்காக நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. போக்குவரத்துக் கழகம் சில தகுதிகளை, அதனுடைய தன்மைகளுக்கு ஏற்ப அதை நல்ல முறையிலே கொண்டு வரவேண்டும் என்பதற்காக அதைக் குறித்து வைத்து இருக்கிறோம். அந்த வகையிலே நாம் எடுத்துக் கொண்டு வருகிறோம். நான் ஏற்கனவே சொன்னதைப் போல மனிதாபிமான அடிப்படையில் இது பார்க்க வேண்டிய விஷயம். அதைப் பார்ப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]